# VALEDICTORY SESSION

# Seminar on Waterways in Chennai
# Valedictory Session
## Presentation of the Recommendations of the Seminar

by
Tmt. Susan Mathew IAS,
Additional Chief Secretary & Vice Chairperson,
Chennai Metropolitan Development Authority.

Hon'ble Minister for Information and Chairman, CMDA,
Worshipful Mayor,
Member-Secretary, CMDA,
Chief Planner, CMDA
Distinguished delegates,
Senior Officers of the Government,
Colleagues,
Ladies and Gentlemen.

2. We have come to the close of the two days' Seminar organized by CMDA on the "Waterways in Chennai". The Hon'ble Chief Minister, and the Hon'ble Deputy Chief Minister are spear-heading the river restoration efforts in this metropolitan area as well as in the whole State.

3. We are happy and grateful to the Hon'ble Minister and the Worshipful Mayor for taking time off to be with us at the Valedictory session of the two days' Seminar. We had 5 Technical Sessions, chaired by senior level officials/experts, and had 23 Speakers covering all the aspects of the river flooding, pollution and river restoration. To sum up ones thoughts, at the end of the 2 days' Seminar, I would say that rivers are the lifelines of the metropolis; the river is a living eco-system; water connects us all. The Speakers made very erudite presentation and all of us, we found, lamented the suffocation and the dearth of our water bodies and waterways. We call for concerted efforts to revive and rejuvenate our waterways.

4. The main recommendations of the Seminar are:

(i) Rivers are a living eco-system. They are lifelines of the people, closely linked with culture and tradition. Their restoration, making them environmentally beneficial, has become more imperative than ever, now.

(ii) Rapid urbanization and resultant load on infrastructure and untreated discharge of sullage and sewage into the river have added to the problems of rivers.

(iii) In the last few years, taking stock of the situation, certain efforts have been taken to improve Chennai's river-environment; now we have a road map for river conservation.

(iv) The priorities and phasing of the plan implementation to achieve the goal should be clearly listed and the role of the stakeholders clearly defined. The sequence of actions to tackle the problem may be –

- Flood alleviation
- prevention of pollution to the waterways
- cleaning up of the waterways by removing encroachments & obstructions,
- Restoration/improvements to the waterways and continued maintenance.

(v) River conservation is a long term project, and it has to be sub grouped as short term, medium and long term proposals.

(vi) Flood is not a curse. It is a natural phenomenon.

(vii) Floods are opportunities to augment ground water recharge by construction of check dams, filter wells, and underground tunnels/storage reservoirs if the soil conditions and slopes permit.

(viii) Storage capacity in lakes and other water bodies has to be increased.

(ix) Wherever possible the rivers should be widened, with submersible areas at middle level which may be developed as recreational areas, walk ways and bio-diversity zones to prevent encroachment

(x) Flood plains should be developed along the waterways in the areas outside the towns and cities, adopting the retention modal, as a solution against flood hazards; these flood plains could be developed as parks or green belts for recreation as camp sites, etc.

(xi) The feasibility of converting the middle stretch of B'Canal as a water storage reservoir in the long run should be examined.

(xii) The river basin has to be taken as a planning unit and not the river alone.

(xiii) In Chennai, there are systemic deficiencies in sewage collection and disposal which need to be addressed with a time-frame.

(xiv) Efforts were taken under Chennai City River Conservation Project (CCRCP) to reduce the pollutants in the sewage let into the waterways) by Metro-water. These efforts have to be continued.

(xv) All unauthorized discharges causing pollution to waterways to be stopped. No sewerage or sullage without treatment shall be allowed to be out into water courses. The pollution levels in waterways should be closely monitored by TNPCB.

(xvi) The major lakes identified for storage of potable water are to be clearly defined and strongly regulated to prevent pollution. Periodical deweeding, and introduction of fish culture to improve the water quality should be also be tried.

(xvii) In large urban areas, decentralized system of sewerage treatment may be tried for cost effectiveness. Advance action to locate and acquire the lands for S.T.P sites shall be taken by the Metro Water.

(xviii) Conventional system of solid waste disposal at dumping sites cause pollution to ground water. The method of scientific landfills should be adopted in all such land fill sites.

(xix) Resettlement and Rehabilitation is resorted to in cases of slums on waterways only because they cannot be allowed to continue therein considering environment and safety against floods. In such R & R schemes a holistic approach with all infrastructure including education facilities, adequate transport facilities, livelihood activities shall be ensured.

(xx) The departments owning the lands along the watercourses shall take action to protect them from encroachment.

(xxi) Eco-engineering should also be adopted as a solution to bring the nature back and rejuvenate the rivers.

(xxii) As the availability of land for Resettlement & Rehabilitation of slum dwellers is a constraint in Chennai, the available regulatory concessions such as additional FSI of 50% for EWS housing, TDR, and premium FSI should be optimally utilized to increase the supply of housing for the target group.

(xxiii) Appreciating the private initiative at Coimbatore by ‘Siruthuli’, it is recommended that corporate sector participation, general public participation, in planning, and improvement of lakes and rivers should be encouraged.

(xxiv) Cleaning up of rivers and conservation of water bodies should be thought of as a movement with the participation of all stakeholders including general public.

(xxv) In our country, no single agency owns waterways or take the responsibility for their maintenance. In Chennai, CMDA may take the lead role bringing in all the stakeholders together to address the problem of waterways and for its restoration.

(xxvi) CDIA study has recommended an institutional set up for planning, coordination and monitoring of water ways conservation, which may be examined and permanent set up constituted.

(xxvii) Adequate public awareness against the pollution of water bodies has to be created by organizing community education campaigns.

(xxviii)The innovative techniques used for Sabarmathi River Water Front development were recorded. Recognizing that flow in the rivers will dilute and reduce the pollution, ways and means to have increased flow in the rivers in Chennai (as tried in Sabarmathi) may be examined.

(xxix) The experiences of Bhopal lake development project presented were recorded. Integrated conservation and management plans for lakes including catchment areas are to be prepared and implemented. No Construction Zones in the upstream of the lakes identified have to be clearly demarcated as may be recommended by the PWD/Metro-water and developments regulated.

(xxx) Use of sewage for power generation and recycling of waste water should be encouraged.

(xxxi) Accurate contour map for designing storm water drainage needs to be prepared for the Metropolitan Area.

(xxxii) Agencies such as Chennai Port Trust, who have been benefited from interventions/ changes in the course of rivers in Chennai should contribute financially for their restoration / conservation.

(xxxiii) Recording the efforts of implementation of the Adyar Poonga Master Plan, it was recommended that such pilot projects should be replicated and more such environmentally good eco-parks should be developed, to serve large sections of the population. Getting the citizens involved is important "Saving Waterways" should become a People's movement.

(xxxiv) River front development plan should also aim at creating more recreational open spaces, as its percentage is very low in Chennai

(xxxv) Area development plans prepared at micro level such as Detailed Development Plan should contain plan for ground water recharge at least in large premises such as schools, public places etc.

(xxxvi) Sustainability measures should form part of the Integrated River Restoration Plans.

*****

# சென்னை நீர் வழிகள்– கருத்தரங்கின் நிறைவு விழா சிறப்புரை

திரு மா.சுப்பிரமணியன்
வணக்கத்திற்குரிய மேயர், சென்னை மாநகராட்சி

நேற்றும் இன்றும் தொடர்ந்து சென்னையில் இருக்கிற நீர் வழிநிலைகளின் நிலைகுறித்து நடைபெற்று கொண்டிருக்கிற கருத்தரங்கில் உரையாற்றிட வீற்றிருக்கின்ற பெருமதிப்புற்கும் போற்றுதலுக்கும் உரிய மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் மற்றும் தலைவர் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், மரியாதைக்கும் உரிய எனது இனிய நண்பர் பரிதி இளம்வழுதி அவர்களே, எனக்கு முன்னாள் கடந்த 2 நாட்களாக எடுக்கப்பட்ட முடிவுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பரிந்துரையை சமர்பித்து வீற்று இருக்கிற கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் துணைத்தலைவருமான அம்மையார் திருமதி. சூசன் மாத்யூ, IAS அவர்களே, மரியாதைக்கும் போற்றுதலுக்கும் உரிய சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர்– செயலர் திரு.விக்ரம் கபூர், IAS, அவர்களே, வருகை தந்து சிறப்பித்து கொண்டிருக்கிற பல துறைகளைச் சேர்ந்த அலுவலர் பெருமக்களே, உங்கள் அத்துணைபேருக்கும் முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். சென்னையில் இருக்கிற நீர்வழிகள் அவற்றை சரியான வகைகளில் மேம்படுத்துவது, பாதுகாப்பது அவற்றை சரியான வழிகளில் பயன்பெறச் செய்வது, என்ற பல வகைகளில், நேற்றைக்கும் இன்றைக்கும், பல நிறுவனங்களிடமிருந்து, பல தொண்டு நிறுவனங்கள் பங்கேற்று, பல அலுவலர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துகூறி அமைச்சர் அவர்களிடத்தில் பரிந்துரை தந்திருக்கிறார்கள். ஒரு மாநகரத்தின் அல்லது நாட்டின் அழகுக்கு கூடுதல் அழகு சேர்ப்பது என்பது அந்த நகரில் ஓடிக் கொண்டிருக்கிற ஆறுகளால் தான், நீர்நிலைகள் தான் என்பதை நாம் நன்றாக அறிவோம். இன்றைக்கு உலகம் முழுவதும் இருக்கிற நாடுகளில், எல்லா நகரங்களும், உலத்தில் இருக்கின்ற பெரு நகரங்களில் அவை எவையாயினும், அந்தப் பெருநகரங்களில் ஓடிக் கொண்டிருக்கிற ஆறுகள்தான், அந்த மாநகரின் ஒரு மிகப் பெரிய அளவிலான சிறப்பு, அழகு இருந்துகொண்டிருக்கிறது என்பதை நன்றாக நாம் அறிவோம். உதாரணத்திற்கு சிங்கப்பூரில் ஓடிக் கொண்டிருக்கிற சிங்கப்பூர் ஆறு. சிங்கப்பூர், அதில் ஓடும் சிங்கப்பூர் ஆறு, 77 ம் ஆண்டிற்கு முன்னால் வரை இந்த சிங்கப்பூர் ஆறு ஒரு ஆயிரம் குடிசைகளை தன் கரை ஓரத்தில் கொண்டிருந்ததாகவும், 4,000 க்கு மேற்பட்ட சிறிய வணிக வளாகங்களை தன்னகத்தே கொண்டிருந்ததாகவும், 400க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள், 200க்கும் மேற்பட்ட பன்றிப்பண்ணைகள் போன்றவற்றை தன்னகத்தே உள்ளடக்கிய மிகவும் கேவலாமான சூழலில் இருந்த ஓர் ஆறு. அந்நாட்டின் பிரதமரின் முயற்சியால் ஓர் பத்தாண்டுகளுக்குப்பிறகு சிங்கப்பூர் ஆறு அந்த ஆற்றின் ஓரம், அருகில் யாரும் போவதற்கே தயங்கிய நிலை இன்றைக்கு மாறி தற்போது ஆற்று ஓரத்தில் வீடு கிடைத்தால் எத்தனை லட்சங்கள் ஆனாலும் கூடுதலாக கொடுக்க தயாராக உள்ளார்கள். அதேபோல் பல நாடுகள், லண்டனில் தேம்ஸ் நதி, ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவில் மாஸ்கோ நதி, ஜெர்மனி தலைநகர் பிராங்பட்டில் ரைன் ஆறு, பாரிசில் சீன் ஆறு போன்ற பல ஆறுகள்,

அண்மையில் கோபன்ஹேகனுக்கும், பிரான்ஸ் சென்ற போது எந்த நகரம் போனாலும் அந்த ஆறுகளின் அழகு என்பது எல்லோரையும் ஈர்க்கும் வண்ணம் இருந்து கொண்டிருக்கிறது. அந்த வகையில்தான் தேம்ஸ் நதியானாலும் சரி, மாஸ்கோ ரிவர், சீன் ரிவர், ரைன் ரிவர், சிங்கப்பூர் ரிவர், ஆக இருந்தாலும், உலகம் முழுவதும் உள்ள இந்த ஆறுகளால் தான் அந்த நகரத்திற்கு அழகு.

2. இப்போது 22 நீர் நிலைகள் இருந்து கொண்டிருக்கிறது. கூவம் ஆறு , ஓட்டேரி நல்லா, பக்கிம்ஹாம் கால்வாய், கேப்டன் காட்டன் கால்வாய், விருகம்பாக்கம் கால்வாய், வீராங்கல் ஓடை இப்படி 22 நீர் நிலைகளை நம்முடைய சென்னையிலேயும் இருந்து கொண்டிருக்கிறது. இந்த 22 நீர் நிலைகளின் ஓரமும் இப்போது யாரும் பக்கத்திலே செல்வதற்கு கூட தயங்கி கொண்டிருக்கிற நிலையை பார்த்துக் கொண்டிருக்கிறோம். அடையாறு ஆறாக இருந்தாலும் சரி, கூவம் ஆறாக இருந்தாலும் சரி, அந்த காலத்தில் ஓர் 40, 50 ஆண்டுகளுக்கு காலங்களுக்கு முன்னால் எல்லாம் பொதுமக்களுக்கு மிகவும் பெருமளவில் பயன்பட்ட நீர்நிலைகளாக அவை இருந்து கொண்டிருக்கிறது. ஆராய்வது மட்டுமல்லாமல் மற்றும் தீர்வு, மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆட்சியில் ஏற்பட்டு கொண்டிருக்கிறது. அதனால்தான் பொதுமக்களுக்கு இப்பொழுதுதான் ஓர் நம்பிக்கை பிறந்திருக்கிறது. சென்னையில் உள்ள ஆறுகள், நீர்நிலைகள் ஓர் நல்ல நிலைக்கு வரும் என்பது இன்று மாண்புமிகு துணைமுதல்வர் எடுத்துவரும் நடவடிக்கையும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் போன்ற மிகப் பெரிய நிறுவனம் இன்றைக்கு அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதும் மக்களிடையே ஓர் பெருத்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. மரியாதைக்குரிய அம்மையார் அவர்கள் பேசியபோதும் சொன்னார்கள். பொதுமக்கள் பங்களிப்பது என்பது பெரிய அளவில் அவசியம். நானும், திரு எக்ஸோனோரா நிர்மல் அவர்களும், விருகம்பாக்கம் ஆறு அதன் ஆற்றின் ஓரத்தில் உள்ள இடைஞ்சல்கள், ஆக்கிரமைப்புகள், இவை சம்பந்தமான ஓர் ஆய்வு மேற்கொண்டோம். விருகம்பாக்கத்தில் ஓர் foot over bridge. அந்த பிரிட்ஜ்ன் பக்கத்தில் நின்று கொண்டு கரையை பார்த்து கொண்டிருந்தோம். கும்பலாக மண்டல அலுவர், செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர், 20, 30 அலுவலர்கள், எக்ஸோனோரா அலுவலர்கள் போன்ற 30, 40 பேர் நிற்கிறோம். நின்று ஆற்றைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆற்றில் கழிவை எப்படி அகற்றுவது என்று பார்த்து கொண்டிருக்கிறோம்.

3. அப்போது ஓர் கணவன், மனைவி வேறு ஓர் ரெஸிடென்சியல் ஏரியாவில் இருந்து வந்தார்கள். நேராக ஸ்கூட்டரில் வந்தவர்கள் வீட்டிலிருந்தே பிளாஸ்டிக் பேக்கில் கொண்டு வந்த குப்கைளை அந்த பிரிட்ஜ்ன் மேல் தொப்பகடிர் என்று போட்டுவிட்டு எதைபற்றியும் கவலைப்படவில்லை. வீட்டிலிருந்து குப்பையை எடுத்து வந்து குப்பை கொட்டும் இடமாக எதை தேர்ந்ததெடுக்கிறார்கள் என்றால் நீர் நிலையைத்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்போது நிர்மல் சார் என்னிடம் சொன்னார்கள் இந்த மாதிரி மக்கள் இருக்கும்போது எப்போது இதையெல்லாம் சீர் செய்யப் போகிறோமோ. பொதுமக்களின் பங்களிப்பு என்பது பெரிய அளவிளான அவசியம். ஏதோ நிர்வாகத்தை மட்டுமே சார்ந்து இருக்கிற பிரச்சினை அல்ல. 2 பேருமே சேர்ந்து பொதுமக்கள், அரசு நிர்வாகம், உள்ளாட்சி நிறுவனம் இல்லை எனில் 2பேருமே சேர்ந்தால் தான் சரிபண்ணமுடியும். இப்போது கூட மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் இப்ப சிங்கப்பூர் சென்று அந்த ரிவரை பார்த்து நம் கூவத்தை சீரமைக்க வேண்டும் என்பது

முதல்வர் அவர்கள் எண்ணம். முதல்வர் அவர்கள் அண்மையில் சென்னையில் ஓர் மேம்பாலம் திறந்து வைக்கும் போது ஓர் செய்தியைச் சொன்னார்கள். போக்குவரத்து நெரிசலுக்கு மேம்பாலங்கள் திறந்து வைப்பது என்பது எனக்கு ஓர் மிகப் பெரிய மனநிறைவான விஷயம். இதைக்காட்டிலும் ஓர் மனை நிறைவு ஏற்படும் எனில் இந்த கூவம் சீர்பட்டு கூவத்தில் நம் வீட்டுக் குழந்தைகள் அதில் என்று விளையாடுகிறார்களோ அந்த மாதிரி ஓர் சூழல் என்று வருகிறதோ அன்று தான் மகிழ்ச்சி என்று சொன்னார்கள். அதற்குதான் நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அதை எப்படியாவது, அந்த கூவத்தை சீர் அமைக்க வேண்டும் என்று அதற்கான முயற்சிகள் இறங்கப்பட்டுள்ளன.

4. கூவத்தை இப்போ பார்த்தால் கூவம் ஒரம் 11,000 குடிசைகள், கூவம் கரையில் ஆக்கிரமிப்பு பண்ண குடிசைகள். 11,000 குடிசைகளில் இதுவரை 5000 குடிசைகள் கூவத்திலிருந்து அகற்றப்பட்டு, மாற்று குடியிருப்புகள் தரப்பட்டுள்ளன. ஓர் சில அரசியல் கட்சிகள், வேணும் என்று அரசியல் பண்ண, மாற்று இடம் அங்கேயே இடம் கொடு என்கிறார்கள். கூவத்தில் இருக்கிறவர்கள் காலையிலே எழுந்து குடிசையிலிருந்து வெளியே வந்து காலை வைத்தால் சாக்கடையில்தான் காலை எழுந்து காலை வைக்கனும். சிந்தாதிரிப்பேட்டையில் 500 குடிசைகள் அவர்கள் காலை எடுத்து வைத்தால் சாங்கடையில்தான்வைக்கனும். இவர்களை 500 பேரை எடுத்து 370 ச.அடி, அல்லது 350 ச.அடி என்ற வகையில் பெரும்பாக்கம், சோழிங்கநல்லூர் ல் வீடு கட்டி, ரூபாய் 5 லட்சம், 5,80,000 ரூபாய் என்ற அளவில் நல்ல வீடு கட்டி, சுனாமி போன்ற பேரிடரில் கூட தாங்கக் கூடிய தன்மை மிகுந்த நல்ல கட்டிடங்களாக கட்டி, அங்கு அவர்களைஅனுப்பி அங்கு குடிநீர் வசதி, பஸ் ஸ்டாண்டு எல்லா வசதியும் பண்ணி அங்கு அனுப்பிவைத்தால் ஜனங்க அங்கு சந்தோஷமாக போகிறார்கள். ஓர் சில அரசியல் கட்சிகள் என்ன சொல்கிறார்கள் என்றால் ஏழை மக்களை இங்கிருந்து காலி பண்ணி விட்டார்கள் இங்கு ரிக்ஷா ஒட்டி கொண்டிருந்தார்கள். ஆட்டோஓட்டினார்கள். செம்மஞ்சேரியில் போய் என்ன பன்னுவாங்க. என்று கேட்கிறார்கள். சிந்ததாரிபேட்டையில் ஒடின ஆட்டோ செம்மஞ்சேரியில் ஓடாதா? இதைவிட நன்றாகவே ஓடும். அங்கு இதைவிட நல்ல ஐ.டி கம்பெனிகள் உள்ளது. தாராளமாக ஒடும். ஆனால் அரசியல் ரீதியா, அந்த நகரை நல்வழி படுத்துவதற்கு, எல்லாரும் கைகோர்க்கனும். ஆளும் கட்சி. ஏதிர் கட்சி இதை எல்லாம் தாண்டி, எல்லலோரும் கை கொடுத்தால்தான் ஓர் நகரம் என்பது தூய்மையாகும். அந்தமாதிரி நிகழ்வுகளை சந்தித்துதான் இன்றைக்குமாண்புமிகு முதல்வர் அவர்கள், இப்போது 5000 குடிசைகள் அகற்றப்பட்டு உள்ளது. இன்னும் ஓர் 6000 குடிசைகள் சிந்தாதிரிப்பேட்டை ஓரம் உள்ள ஆட்டோ ஒர்க் ஷாப் எல்லாம் நிறைய உள்ளன. 500க்கும் மேற்பட்ட ஆட்டோ ஓர்க் ஷாப். இவர்கள் எல்லோரையும் மறைமலை நகரில் ஆட்டோ நகர் மாதிரி இடம் கொடுத்து இவ்ாகள் அங்கிருந்து காலி பண்ணப்போகிறார்கள். இந்த மாதிரி நிறைய நிகழ்வுகள் நடக்க உள்ளன. நிச்சயம் எல்லாருக்கும் ஓர். நம்பிக்கை வந்துள்ளது. சென்னைப் பெருநகர மக்களுக்கு, ஓர் மிகப் பெரிய நம்பிக்கை மாண்பு மிகு துணை முதல்வர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த குழுவின் நடவடிகையால் எதிர் காலத்தில் கூவத்தில் குளிப்பது உறுதி என்கின்ற அந்த எண்ணம் நம்பிக்கை வந்துள்ளது. எதிர்காலத்தில் கூவத்தில் குளிப்பது உறுதி என்கிற எண்ணம் அந்த மக்களுக்கு வந்துள்ளது.

5. கூவம், கூவமா இருந்தாலும் சரி பக்கிம்ஹாம் கானலாக இருந்தாலும் சரி, அடையாறாக இருந்தாலும் சரி, பிரச்சனை என்று பார்த்தால் சாக்கடை கழிவுவுளை தடுத்து அதை டிஸில்ட் பண்ணி அதை தூய்மையான நீராக ஆற்றில் விடுவது, கடலிருந்து அந்த நீரை கொண்டு வந்து அந்த ஆற்றை சுத்தப்டுத்தி அதற்கு barrage கட்டுவது இந்த மாதிரி நிறைய நிகழ்வுகளை இந்தஅரசாங்கம் யோசித்து கொண்டிருக்கிறது. இதற்கு பல்லாயிரக்கணக்கன கோடி செலவு செய்ய அரசாங்கம் இன்றைக்கு தயாராக உள்ளது.

6. சிந்தாதிரிப்பேட்டையில் அகற்றப்பட்ட குடிசைககளை அகற்றப்பட்ட இடத்தில் ஓர் அழகிய பூங்கா ஒன்று அமைப்பதற்கு மாநகராட்சி திட்டமிட்டு ஒரு ஒன்றரை கோடி ரூபாய் செலவில் பூங்கா அமைப்பதற்கு வருகிற 15ம் தேதி பட்ஜெட்டில் அதற்கான புரொவிஷன் கொடுத்திருக்கிறோம். அதேபோல இங்கே பக்கத்திலே சிவானந்தம் சாலை, சாலையை அகலப்படுத்தி அந்த இடத்தில் பூங்கா அமைக்க பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது.

7. ஆக கூவம் ஒரம் சுற்றிலும், கூவத்தின் ஓரம் இரு கரைகளிலும் அழகிய புல்வெளிகள், அழகிய பூங்காக்கள் உருவாக்கப்பட்டு, இந்த சாக்கடை நீர் அந்த ஆற்றிற்கு வராமல் தடுக்கின்ற பணி என்பது தொடங்கப்பட்டு உள்ளது. சென்னையில் 2 பெரிய ஏரிகள் உள்ளது. ஒன்று வேளாச்சேரி. இன்னொன்று சேத்பட்டில் இருக்கிற Fisheries Department க்கு சொந்தமான இன்னொரு ஏரி. அதே போல் மை லேடிஸ் பூங்காவும் ஒரு பெரிய ஏரி உள்ளது. மாநகராட்சி என்ன பண்ணி உள்ளது என்றால் பொதுப் பணி துறையில், பெருமதிப்பிற்குரிய திரு. கப்பூர் சாருக்குத் தெரியும், பொதுப்பணி துறையிடம் மாநகராட்சி அந்த இடத்தை கேட்டுப் பெற்று வேளச்சேரி ஏரிக்கரையில் உள்ள குடிசைகளை அப்புறப்படுத்தி, மாற்று இடம் கொடுத்து, அந்த ஏரியை தூய்மைப்படுத்தியது. அதற்கு பெரியார் நகர், வேளச்சேரியிலிருந்து வரும் சாக்கடை இணைப்பை துண்டித்து தனியான பம்பிங் ஸ்டேஷன் அமைத்து அந்த ஏரி நீரை தூய்மை படுத்தி, படகு விட்டு சுற்றுலா மையமாக்க மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. அதேபோல் சேத்து.பட்டு ஏரியில் இன்று மீன் வளத்துறை சார்பில் மேம்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மைலேடிஸ் பார்க்கில் உள்ள இன்னொரு குளம். அதையும் சுற்றுலாத் தலமாக மாற்ற சென்னை மாநகராட்சி சார்பில் பணிநடைபெற்று கொண்டுள்ளது.

8. சென்னை மாநகராட்சியில் சார்பில் 947 கி.மி நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய் உள்ளது. இந்த நிர்வாகம் பொறுபேற்று மூன்றையாண்டு காலத்தில் ஏறத்தாழ 142 கி.மீ நீளத்திற்கு புதிய மழை நீர் வடிகால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. புதிய மழை நீர் வாடிகால்வாய்கள் அமைப்பப்ட்டது என்பது மட்டும் அல்லாமல் தொடர்ந்து periodically desilting என்கிற வகையில் ஆண்டு தோறும் மழைக்கு முன்னால் அந்த கால்வாய்களில் தூய்மை படுத்துவது போல் பணிகள் வேகமாக நடைபெற்று கொண்டிருக்கிறது. அதனால் தான் கடந்த ஆண்டு மழையின் போது சென்னையில் பெரிய அளவிலான மழைநீர் வெள்ளம் பாதிப்பு சென்னையில் இல்லாமல் இருந்தது. பொது மக்கள் பரவலாக எல்லா இடங்களிலும் மிகப் பெரிய மகிழ்ச்சிக்கு உள்ளானார்கள். இதே போன வருஷம், இந்த வருஷத்திற்கு முந்தைய வருஷம் பெரிய அளவில் மழை பாதிப்பு ஏற்பட்டது. அந்த பாதிப்புக்கான காரணங்கள் பலவாறு

சொல்லப்பட்டாலும், இந்த நீர்நிலைகள் சரியான அளவில் பராமரிக்கப்படாததுதான், அந்த வெள்ளப் பாதிப்புக்கு காரணம் என்பது எல்லோருடைய கருத்து. உதாரணமாக போரூர் ஏரியிலிருந்து நிரம்பி வந்த நீர், மதுரவாயல் ஏரியிலிருந்து நிரம்பி வந்த நீர், விருகம்பாக்கம் கால்வாயில் அதிகமாக வந்து அதிலிருந்து வந்த அந்த உபரி நீரால் விருகம்பாக்கம், நெசப்பாக்கம், சூளைமேடு, எம்.எம்.டி.ஏ காலனி போன்ற பல பகுதிகள் வெள்ள நீர் பாதிப்புக்கு உள்ளாகி ஏறத்தாழ 40 படகுகளில் அந்த மக்களை உயிர்காத்தநிலை கடந்த ஆண்டுக்கு முன் இருந்தது. அதேபோல புளியந்தோப்புக்கு ஓட்டேரி நல்லா சர்பிளஸ் வாட்டரை அந்த பகுதியில் உள்ள மக்களுக்கு ஓர் பெரிய அளவாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால்தான் சென்னை மாநகராட்சி ஓர் கன்சல்டண்டை நியமித்து மத்திய அரசாங்கத்திடம் JNNURMன் திட்டத்தின் கீழ் 1447 கோடியே 91 இலட்ச ரூபாய்க்கு மாநகராட்சியும், பொதுப்பணித் துறையும் இணைந்து திட்டங்கள் கொடுத்து, அதற்கு கரைகளை அமைப்பது, கான்கீரிட் தளங்கள் அமைப்பது போன்ற பல பணிகளை செய்ய ரூபாய் 1447 கோடிக்கு திட்ட மதிப்பீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

9. JNNURM திட்டத்தின் கீழ் ஒப்புதல் பெறப்பட்டுள்ள அந்த திட்டத்திற்கு மத்திய அரசு 35 சதவீதம், மாநில அரசு ஓர் 15 சதவீதம் மீதம் 50 சதவீதம் மாநகராட்சியே நிதி ஒதுக்கீட்டை பொறுத்தவரை செய்தாலும், இந்த காரியங்கள் என்பது இப்பொழுது நடக்கத் தொடங்கி, இப்பதான் போனமாதம் 4 reachக்கு 4 பகுதிகளுக்கு டெண்டர் அப்ரூவல் கொடுத்துள்ளோம். இன்னும் 15 நாள் அல்லது ஒரு மாத காலத்திற்குள் அந்தப் பணிகள் தொடங்கப்படும். இந்தப் பணிகள் தொடங்கிய பிறகு, நிச்சயம் இன்னும் இரண்டு அல்லது இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு, ஓர் பெரிய அளவிலான மழை பெய்தாலும் கூட, அந்த மழைநீர் பாதிப்பு இல்லாமல் போகும். உதாரணமாக வெறும் மழைநீர் வடிகால்வாய்கள் கட்டுவது மட்டுமில்லால், நான் ஏற்கனவே சொன்ன மாதிரி, விருகம்பாக்கம் கால்வாயில் இந்த வருடம் 3 கோவில்கள் ஆக்கிரமிக்கப்பட்டு கட்டப்பட்டுள்ளது. ஆக்கிரமித்து கட்டப்பட்ட கோவில்கள் 3. அதிரடியாகப் போய் இந்த 3 கோவில்களையும், நாங்கள் இடித்தோம். அப்பொது ஆன்மீக வாதிகள் எல்லாம் சண்டைக்கு வந்தார்கள். என்ன கோவிலை எல்லாம் இடிக்கிறார்கள் என்று யாரிடம் சொல்லியிருக்கிறார்கள் என்றால், இதே நிர்மல் சாரிடம் சொன்னார்கள். கால்வாய் கரையில் கட்டிய க் கோவில்களை இடித்தார்க்ள் என அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு அவர் உங்களை காப்பாற்றத்தான் அதைப் பண்ணி உள்ளார்கள். போனவருஷம் அந்த ஆக்கிரமிப்புகள், அந்த கோவில்களால்தான், உபரி நீர் அந்த ஊருக்கு போனது. அதை எடுத்துவிட்டால் போய்விடும். சாமிதான் உங்கள் காப்பாற்றியுள்ளார்கள். அதில் ஒரு பிரச்சனையும் இல்லை. யாரும் தகராறு செய்ய வேண்டாம் என்று சொல்லியுள்ளார். மாநகராட்சி நிர்வாகம் அந்தக் கோவில்களை எடுத்தது. அதை எடுத்தால் மட்டும் போதுமா. ஓரிடத்தில் 10 மீட்டர் ஆக இருந்தால் இன்னொரிடத்தில் 3 மீட்டராக உள்ளது. ஆக்கிரமிப்புகள் என்பது அந்த கால்வாயாக இருந்தாலும் சரி, எந்தக் கால்வாயாக இருந்தாலும் சரி ஆக்கிரமிப்புக்கு உள்ளாகாத இடம் இல்லை என்பது இல்லாமலேயே இருந்து கொண்டிருக்கிறது. எனவே இப்பொழுது என்ன முடிவு செய்துள்ளோம் என்றால், விருகம்பாக்கம் கால்வாய் என்பது போரூரிலிருந்து வரும் விருகம்பாக்கம் கேனால் நிரம்பி வரும் பொழுது அதில் வரும்

உபரி நீரை கூவத்தில் விட ஒரு தனிக்கால்வாய் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. அதே போல் மதுரவாயில் ஏரியிலிருந்து வருகின்ற உபரி நீரை இன்னொரு தனிக்கால்வாய் மூலம் கூவத்தில் விடுவது என்று திட்டமிடப்பட்டுள்ளது. புளியந்தோப்பு பகுதியில் ஒட்டேரி நல்லாவிலிருந்து ஒரு துணைக்கால்வாய் கூவத்திற்கு இன்றைக்கு திட்டமிடப்பட்டுள்ளது. வேளச்சேரி ஏரியிலிருந்து மழைநேரங்களில், அதிகமாக அந்த ஏரி நிரம்பிவிடும் பட்சத்தில் அங்கிருந்து வரும் அந்த உபரி நீரை பக்கிஹாம் கால்வாயில் விட ஓர் புதிய கால்வாய் திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோல் வீராங்கல் ஓடையிலிருந்து வருகிற உபரி நீரை ஓர் புதிய கால்வாய மூலம் பக்கிஹாம் கானலில் விட திட்டமிடப்பட்டுள்ளது. இவையெல்லாம் கட்டி முடிய 2 அல்லது இரண்டரை ஆண்டுகள் ஆகும். இவையெல்லாம் முடிந்த பிறகு சென்னையில் மழை வெள்ள பாதிப்பு என்பது பெரிய அளவில் இருக்காது என்பதை மகிழ்ச்சியுடன்தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன். இப்படி மழை நீர் வெள்ளத்தை மீட்பது என்பது பொதுமக்கள் பங்களிப்பு, ஒன்று நீர் நிலையை பாதுகாப்பதற்கு, பொது மக்கள் பங்களிப்பு என்பது பெரிய அளவில் அவசியமாக உள்ளது. அதற்கு நம்முடைய சி.எம்.டி.ஏ யும் சென்னை மாநகராட்சியும், எதிர்காலத்தில் ஒருங்கிணைந்து அதற்கான விழிப்புணர்வு இருக்க வேண்டும் என அமைச்சர் விரும்புவதாக நிச்சயம் அந்த பங்களிப்பு என்பது மாநகராட்சியின் சார்பில் இருக்கும். பொதுமக்கள் பங்களிப்பு இல்லாமல் நிச்சயம் இதை நாம் ஓர் வெற்றிகரமான திட்டமாக ஆக்க முடியாது. என்னதான் சிவில் ஒர்க்ஸ் பொறுத்தவரை நாம் நல்லா செய்து கொடுத்தாலும் பொதுமக்கள் பயன்படுத்துகிற விதம் என்று ஒன்று இருக்கிறது. எனவே பொதுமக்களின் பங்களிப்பு கேட்டறிவது, பொதுமக்களின் பிரதிநிதிகளாக உள்ள, தொண்டுநிறுவனங்களைச் சார்ந்தவர்களின் கருத்துகளை கேட்டறிவது இந்த கூட்டத்தில் இன்றைக்கு நடத்தப்பட்டு இருக்கின்ற மிகச் சிறந்த ஓர் நிகழ்வாக இருக்கிறது.

10. சென்னையைப் பொறுத்த வரையில் கோயில் குளங்கள் கோவில் குளங்கள் பொறுத்தவரை, அவை இந்து சமயத் துறைக்கு சொந்தமாக இந்த கோயில் குளங்கள் என்றாலும், அந்த கோயில் குளங்கள் அந்தக் குளங்களில் நேராக வருகின்ற மழைநீர் மட்டுமே அந்த குளங்களில் விடுகின்ற நிலை இருந்து கொண்டிருந்தது. மாநகராட்சி மழைகாலங்களில் வீணாகின்றநீரை அந்த குளங்களில் தேக்கி வைப்பதற்கு, மழை நீர் வடிகால்வாய்களை அந்த குளங்களுக்கு இப்போது திருப்பி விடுவதற்கு, பல முயற்சிகள் எடுத்துள்ளோம். உதாரணமாக திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயில் குளம், இப்போது சீர் அமைக்கப்பட்டுள்ளது. சைதாப்பேட்டையில் இருக்கின்ற பெருமாள கோவில் குளம் காரணீஸ்வரர் கோவில் குளம், மேற்கு மாம்பலத்தில் உள்ள எல்லை அம்மன் கோவில் குளம் இப்படி பல குளங்களில் வீணாகும் மழைநீரை கோயில் குளங்களில் சேகரிப்பதற்கு இப்போது நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அதேபோல் திருவல்லிக்கேணியில் உள்ள பார்த்தசாரதி கோவில் குளம் அது இந்து சமயத் துறைக்கு சொந்தமாக இருந்தாலும், மாநகராட்சி அதை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டு அந்த கால்வையை அந்தகுளத்தில் விடும் அந்தப் பணியை மாநகராட்சி செய்து கொண்டிருக்கிறது.

**11.** இப்படி நீர் நிலைகளை காப்பதற்கு, நீர் நிலைகளை மேம்படுத்துவதற்கு நீர் நிலைகளில் இருந்து மக்களுக்கு எதிர்காலத்தில் பாதிப்புக்கு உள்ளாகமல் தடுப்பது போன்றவற்றிக்கு முயற்சிகளை மாநகராட்சி நிர்வாகம் மாண்புமிகு தமிழக தலைவர் கலைஞர், மாண்புமிகு துணை முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் நல் ஆலோசனைகளுடன் செய்து கொண்டிருக்கிறது. இந்த நீர் நிலைகள் இப்போது இப்படி இந்த stagnation அங்கங்கே, தேங்கி நிற்கும் நிலையில் இன்று ஓர் மிகப் பெரிய பிரச்சினை கொசுக்கள். கொசுக்களால் இன்றைக்கு ஏற்படும் வியாதிகள் கொஞ்சம் நஞ்சம் அல்ல, இவற்றிற்கு என்ன பேர் வைப்பது என்று தெரியாமல் பன்றி காய்ச்சல், மாட்டுக் காய்ச்சல், ஆட்டுக் காய்ச்சல், சிக்கன் குனியா போன்ற பலதரப்பட்ட பெயர் வைத்து புதுப்புது வியாதிகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆக நீர் நிலைகள் சுத்தமாக ஆகும்பொழுது, நீர் நிலைகள் தூய்மைப்படுத்தப்படும்போது, நீர் நிலைகளில் உண்மையிலே ஓர் தூய்மையான நீரை மட்டுமே தாங்கிச் செல்கின்ற ஓர் நிலை வரும்போதுதான் இந்த எல்லா பிரச்சினைகளுக்கும் ஓர் விடிவு என்பது இருக்கும். அந்த விடிவிற்கான தீர்வாக இந்தக் கூட்டம் நேற்றைக்கும், இன்றைக்கும் நடைபெற்று பல பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளது. நிச்சயம் இந்த பரிந்துரைகளைப் பொறுத்த வரை CMDA மாநகராட்சிக்கு என்னென்ன பரிந்துரைகள் செய்துவிடவேண்டும் என்று கூறுகிறோர்களோ நிச்சயம் அத்துனை பரிந்துரைகளையும் மாநகராட்சி சிரமேற்கொண்டு செய்யும். இந்த மாநகர மக்களை காக்கச் செய்யும் என்று கூறி இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

நன்றி., வணக்கம்.

******

# சென்னை நீர் வழிகள் – கருத்தரங்கம் நிறைவு விழா
## நிறைவுரை

திரு பரிதி இளம்வழுதி,
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் மற்றும்
தலைவர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் சென்னை நீர்வழிகள் குறித்து இரண்டு நாட்கள் நடைபெற்ற கருத்தரங்கத்தின் நிறைவு விழாவில் கருத்தரங்கப் பரிந்துரைகளை எடுத்துரைத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவர் திருமதி சூசன் மேத்யூ அவர்களே, இந்த நிகழ்வில் சிறப்புரை வழங்க வருகை தந்துள்ள வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு மா. சுப்பிரமணியன் அவர்களே, இந்த கருத்தரங்கத்தை சிறப்பான முறையில் ஒருங்கிணைத்து நடத்திய சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர்–செயலர் திரு விக்ரம் கபூர் அவர்களே, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அழைப்பை ஏற்று இந்த கருத்தரங்கில் பங்கேற்று ஆலோசனை வழங்கியுள்ள பெருமக்களே, துறைசார்ந்த நிபுணர்களே, சென்னை மாநகரின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட கல்வியாளர்களே, பத்திரிக்கை மற்றும் தொலைகாட்சி நண்பர்களே, அரசு அலுவலர்களே, உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2 மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு ஜனநாயக மாண்புகளுக்கு மதிப்புக் கொடுக்கும் வகையில், மக்களின் கருத்தை அறிந்து நிபுணர்களின் ஆலோசனைகளை ஏற்று கடந்த நான்காண்டு காலமாக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கேற்ப எல்லாத் துறைகளிலும் புதிய திட்டங்களையும், எதிர்காலத் தேவையை கருத்தில் கொண்டு தொலைநோக்குப் பார்வையுடன் பல செயல்பாடுகளை தமிழக அரசு மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 'சென்னை நீர்வழிகள் மற்றும் சுற்றுச்சூழல்' குறித்தும், சென்னை நீர்வழிகளை மேம்படுத்துதல் குறித்தும் சிறப்பான கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்து இரண்டு நாட்கள் நடத்தி இன்று நிறைவு கட்டத்திற்கு வந்திருக்கிறோம். இந்த கருத்தரங்களில் பல்துறை வல்லுநர்கள் தங்கள் ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக நான் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தலைவர் என்ற முறையில் முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத் தலைவர் திரு ஆர். பாலகிருஷ்ணன், உறுப்பினர்–செயலாளர் திரு ஆர். இராமச்சந்திரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிநீரகற்று வாரிய பொறியியல் இயக்குநர் திரு இளங்கோவன், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு டி.கே. இராமச்சந்திரன், நகராட்சி நிர்வாகத் துறையின் முதன்மைப் பொறியாளர் திரு ரங்கநாதன், சி.பி.ஆர். அறக்கட்டளையைச் சேர்ந்த டாக்டர். நந்திதா கிருஷ்ணா ஆகியோர் சென்னை நீர்வழிகள் மற்றும் சுற்றுப்புற தூய்மை குறித்து ஆக்கபூர்வமான கருத்துக்களை வ ழங்கியிருக்கிறார்கள்.

4 அதேபோல நீர்வழிகள் வளர்ச்சி குறித்தும், நீர்வழிகள் மேலாண்மையில் பிற நகரங்களில் கிடைத்த அனுபவங்களையும் குறித்து அகமதாபாத்தைச் சேர்ந்த சபர்பதி நதிநீர் வளர்ச்சிக் கழகத்தின் பொதுமேலாளர் திரு ஜெகதீஷ் பட்டேல், மத்தியப் பிரதேச மாநிலத்தின் போக்குவரத்துத்துறை செயலாளர் திரு. அனிருத்தே முகர்ஜி , கோவை சிறுதுளி அமைப்பின் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு கே. மயில்சாமி, காசியாபாத்தைச் சேர்ந்த திரு யோகேஷ் சர்மா, தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு நிதிச் சேவை நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு பணீந்திர ரெட்டி மற்றும் புதுடில்லியிலிருந்து வருகை தந்த ஜெர்மன் நிறுவனத்தைச் சேர்ந்த திரு டிர்க் வால்தர் ஆகியோர் சிறந்த கருத்துக்களை அளித்திருக்கிறார்கள். நதிகள் மற்றும் கழிவு நீரகற்றும் முறைகள் குறித்து பொதுப்பணித் துறையின் நிர்வாகப் பொறியாளர் திரு ட்டி. காந்திமதிநாதன், மணிலாவிலிருந்து வருகை தந்த திரு ஜான் வொளோப் விண்தர்கர், அண்ணா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு எம். தீனதயாளன், தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ். மோகன் ஆகியோரும், மாநகரங்களில் நீர்நிலைகள் குறித்து சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறையின் முதன்மைச் செயலாளர் திரு தேவேந்திரநாத் சாரங்கி, சென்னை நதிகள் பாதுகாப்பு அறக்கட்டளையின் திரு ஜோஸ் புரூக்ஸ், பொறியாளர் திரு கே. ரகுராமன், மத்திய நிலத்தடி நீர் வாரியத்தின் மண்டல இயக்குநர் டாக்டர் என். வரதராஜ் ஆகியோரும் அனுபவபூர்வமான ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள்.

5 சென்னையின் கழிவுநீரகற்றும் முறைகள், ஆறுகள், கால்வாய்கள் ஏரிகள் குறித்த ஆய்வுகளை அண்ணா பல்கலைக் கழகத்தின் டாக்டர் கே. தனசேகரன் அவர்களும், தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனத்தின் விஞ்ஞானி திரு கே.எம்.சிவகொழுந்து ஆகியோரும் ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். சிறப்பாக நடத்தப்பட்டுள்ள கருத்தரங்கததில் பங்களிப்பை வழங்கிய உங்கள் அனைவருக்கும் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6 மக்களின் வாழ்வாதாரங்களுக்கு அடிப்படை வசதிகளை திறம்பட செய்து கொடுக்கும் நாடுகளைத்தான் வளர்ந்த நாடுகள் என்றும், உயர்ந்த நாடுகள் என்றும் உலகம் அழைக்கிறது. அங்கு வாழும் மக்கள் சமூகத்தைத்தான் நாகரீகமான மக்கள் சமூகம் என்று அழைக்கிறார்கள். உலக அளவில் பார்த்தோமானால், எல்லா வளங்களும் இருந்தும் போதிய நிர்வாக வழிமுறைகள் இல்லாத காரணத்தால் சிறப்பான திட்டங்களை நிறைவேற்ற முடியாத நாடுகளுமுண்டு. அதே நேரத்தில் பெரிய அளவுக்கு வளங்கள் இல்லாத நிலையிலும், பற்றாக்குறையான அடிப்படை வசதிகளோடு இருக்கும் நாடுகள் சிலவற்றில் சிறந்த நிர்வாகத்தின் காரணமாகவும், மக்களின் விழிப்புணர்பு காரணமாகவும், சிறப்பான திட்டங்களை வழங்கும் நாடுகளும் இருக்கின்றன.

7 'வளர்ந்த நாடு' என்று சொல்லப்படும் அமெரிக்காவில், எல்லா நாட்களிலும், எல்லா நிலங்களிலும் ஆண்டு முழுவதும் ஒரே மாதிரி உற்பத்தியை செய்யமுடியாத நிலையுள்ளது. ஆனால், இந்தியாவில் அனைத்து வகை பயன்பாட்டு நிலங்களிலும், உற்பத்தியைப் பெருக்கக் கூடிய அளவிற்கு போதுமான தட்பவெப்ப நிலை மக்களுக்கு சாதகமாக இருக்கிறது. மிகச் சிறந்த நிர்வாகத்தின் மூலம் உற்பத்தியைப் பெருக்குவதற்கு இயற்கையிலேயே நல்ல வாய்ப்பு நமக்கு அமைந்திருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், சிறந்த தட்பவெப்ப நிலையும், சிறந்த மண்வளமும் கொண்ட

மாநிலமாக உள்ள நிலையில், தமிழக அரசின் சிறந்த திட்டங்களால், தேர்ந்த நிர்வாகத்தால், இந்தியாவிலேயே பல்வேறு துறைகளிலும் முதல் நிலையில் உள்ள மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

8 வரலாற்று அடிப்படையில் எடுத்துக் கொண்டால்கூட நீர்நிலைகளை உருவாக்கி அவற்றை முறையாகப் பராமரித்து வெற்றி கண்டவர்கள் தமிழர்கள் என்பதை நான் இங்கே நினைவு கூற விரும்புகிறேன். சோழ மன்னன் கரிகாலன் காலத்தில் கட்டப்பட்ட கல்லணை இன்றளவிற்கும் மிகச் சிறந்த நீர்வழிகளை நமக்குத் தந்து கொண்டிருக்கிறது. இத்தகைய பின்னனியில், தற்கால தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி மென்மேலும் சிறந்த நிர்வாகத்தை நம்மால் தரமுடியும் என்பதற்காகத்தான் இத்தகை கருத்தரங்களை நடத்தி அதன் மூலம் கிடைக்கும் அரிய ஆலோசனைகளை பெருவதற்கு முயன்றிருக்கிறோம்.

9 இந்தியாவின் பெருநகரங்களுள் முதன்மையான நகரமான இருக்கிற நமது சென்னையில் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும், நீர்வழிகளைப் பாதுகாக்கவும், பல்வேறு திட்டப்பணிகளை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தோடு இணைந்து, சென்னை மாநகராட்சி, உள்ளாட்சித்துறை, பொதுப்பணித்துறை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், குடிசைமாற்று வாரியம் போன்ற அரசுத்துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுத்தி வருகிறது.

10 அரசு தொலைநோக்குப் பார்வையுடன் அடுத்த தலைமுறையும் பயன்பெரும் விதமாக விரிவான திட்டப்பணிகளை தயாரித்து அதற்குப் போதிய நிதி ஆதாரத்தை உருவாக்கி செயல்படுத்தி வரும் அதே நேரத்தில் செய்து முடிக்கப்பட்ட திட்டங்களை பாதுகாக்க மக்களின் ஒத்துழைப்பும் அவசியம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

11 நீர்நிலைகளைப் பாதுகாப்பது, நீர்வழிகளில் இடையூறுகளை ஏற்படுத்தாமல் இருப்பது ஆகியவை மக்களின் கைகளில்தான் இருக்கிறது. சென்னைப் பொறுத்தவரை ஒவ்வொரு நாளும் மக்கள் குடியேறுவது அதிகரித்து வரும் சூழலில், நிலத்தடி நீரைப்பாதுகாக்க மக்கள் முன்வரவேண்டும். தண்ணீரை வீணாக்காமல் முறையாகப் பயன்படுத்த முன்வரவேண்டும். நதிக்கரைகளில் கழிவுகளைக் கொட்டுவது, கழிவுநீரை கலக்க விடுவது போன்ற செயல்களைத் தவிர்ப்பதோடு, குறிப்பாக பிளாஸ்டிக் கழிவுகளைத் கொட்டாதவாறு சமூகப் பொறுப்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

12 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உயர் அலுவலர்கள், பொறியாளர்கள், திட்ட வரைவாளர்கள் உள்ளிட்டோர் இந்த சிறப்பான கருத்தரங்களில் பெறப்பட்ட உயரிய ஆலோசனைகளை, அனுபவரீதியான கருத்துக்களை மனதில் நிலைநிறுத்தி திட்டங்களை வடிவமைக்கும் போது அதனை சிறந்த முறையில் பொறுத்தமாக பயன்படுத்த வேண்டும் என்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

13 ஒரு திட்டத்தின் வெற்றியென்பது அதன் பயனைப் பொறுத்ததாகும். மக்களின் தொடர்ந்த பயன்பாட்டிற்காக நிறைவேற்றப்படும் திட்டங்களை பாதுகாத்து சிறந்த முறையில் பராமரிப்பதில் மக்களும் ஒத்துழைக்க வேண்டுமென்பது எங்களின் வேண்டுகோளாகும். அதோடு மட்டுமல்லாமல், மென்மேலும் சிறந்த பணிகளின் மூலம் சென்னை நகரின் தூய்மையைப் பேணுவதும்,

ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து வாழ்வதற்கும் முயற்சி எடுக்க வேண்டும். குறிப்பாக மரக்கன்று நடும் சமூகப் பணியை மேற்கொள்வதோடு, அதனையும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்தும், குழந்தைகளுக்கு சொல்லித் தருவதின் மூலம் கடந்த தலைமுறை சமூகம் மறந்து போனவற்றை எதிர்காலத் தலைமுறை சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையை இதன்மூலம் ஏற்படுத்த முடியும்.

14 இந்த வகையில் அரசின் திட்டப்பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்ற அரசோடு மக்களும் கைகோர்த்து ஒத்துழைக்க வேண்டுமென்று இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன். பல்வேறு துறை சார்ந்த பெருமக்கள் வழங்கிய ஆலோசனைகளையும், அனுபவங்களையும், தொழில்நுட்ப சாத்தியக் கூறுகளையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறோம். தொடர்ந்து உங்களின் ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் உங்களை கேட்டுக் கொள்கிறேன். சென்னை மாநகரை மென்மேலும் தூய்மையாகவும், சுகாதாரமாகவும், பசுமை சூழ்ந்த மாநகராமாகவும் வளர்த்தெடுக்கும் நோக்கத்தில் எதிர்காலத்தில் திட்டமிடும்போது உங்களது ஆலோசனைகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம் என்று கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

*****